

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி சட்டமன்ற தொகுதி திருநின்றவூர் நகராட்சியில் ரூபாய் 2 கோடியே 90 லட்சம் மதிப்பீட்டில் வார்டு 24–ல் ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் கட்டிடம் , 27 வது வார்டுயில் பூங்காவில் நடைபாதை மற்றும் மேம்பாட்டு பணி சீனிவாச நகர் பிரதான சாலை அமைக்கும் பணி, 9 வது வார்டு பிரகாஷ் நகர் பகுதியில் சமுதாய கூடம் கட்டிடம் அமைக்கும் பணிகளை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார் உடன் நகர் மன்ற தலைவர் உஷா ராணி ரவி, ஆணையர் ஜீவிதா, மாவட்ட அவைத் தலைவர் ம.ராஜி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜி. ரமேஷ், நகர செயலாளர் தி.வை.இரவி, நகராட்சி பொறியாளர் குமார், மற்றும் கழக நிர்வாகிகள் அரசு அலுவலர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள் வட்ட செயலாளர் கலந்து கொண்டனர்.

### தேர்தலை வைத்து எந்தத் திட்டமும் கழக ஆட்சி செய்வதில்லை! பொங்கலுக்கு

# கரும்பை நான்காக வெட்டி கொடுத்தது அ.தி.மு.க. ஆட்சி!

## பேரவையில் – அமைச்சர் அர.சக்கரபாணி பதிலடி!

சென்னை, ஜன. 26 - சட்டப் பேரவையில் பதிலளித்த அமைச்சர் அர.சக்கரபாணி, பொங்கலுக்கு கரும்பை நான்காக வெட்டி கொடுத்தது அ.தி.மு.க. ஆட்சி என்ற குறிப்பிட்டார்.

இதுகுறித்து, பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**ஆர்.பி. உதயகுமார்:** இந்த ஆண்டு, 2026 ஆம் ஆண்டு தேர்தலும் வருகிறது, பொங்கல் பரிசு அறிவிப்பும் வருகிறது. ஆக, தேர்தல் வந்தால்தான் இந்த அரசுக்கு மக்கள் ஞாபகம் வருமா என்று தமிழ்நாட்டு மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

**அமைச்சர் மு.பெ. சாமிநாதன்:** உறுப்பினருக்கு ஒன்றை ஞாபகப்படுத்துகிறேன். அ.தி.மு.க. அரசு நடைபெற்றபொழுது பள்ளி மாணவர்களுக்கு வழங்கிய முட்டை எல்லாம் ரத்து செய்யப்பட்டது. விவசாயிகளுக்கு கொடுத்த கட்டணமில்லா மின்சாரம் ரத்து செய்யப்பட்டது. அதற்கு பிறகு தேர்தல் வந்த போதுதான் அது வந்தது. கண் கெட்ட பிறகுதான் சூரிய நமஸ்காரம் செய்தார்கள் இவர்கள் என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

**அமைச்சர் அர. சக்கரபாணி:** பொங்கல் பரிசு தொகுப்பு கொடுத்தோம் என்று பேசினார்கள். மதுரை மாவட்டம், மேலூரில் நிறைய கரும்பு விளைகிறது. ஒரு கரும்பை நான்காக வெட்டி யாராவது பொங்கல் கொண்டாட முடியுமா? சரித்திர சாதனை படைத்தது நீங்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், எங்கள் முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து முழு நீள கரும்பு கொடுத்திருக்கிறார்கள். உங்கள் ஆட்சியில் ஒரு கரும்பை நான்காக வெட்டி கொடுக்கவில்லையென்று சொல்லுங்கள் பார்க்கலாம். கொடுத்தீர்களா, இல்லையா? தமிழ்நாட்டு மக்கள் சொல்வார்கள். (குறுக்கீடுகள்) ஒரு கரும்பை நான்காக வெட்டி பொங்கலுக்குக் கொடுத்தால் எப்படி பொங்கல் கொண்டாட முடியும். (குறுக்கீடுகள்)

அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஒரு கரும்பை மூன்றாக, நான்காக வெட்டித் துண்டா கொடுத்தார்களா, இல்லையா என்பதை ஒப்புக்கொள்கிறார்களா, இல்லையா என்பதை மட்டும் சொல்லச் சொல்லுங்கள்.

**அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன்:** நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடனேயே கொரோனாவுக்காக அனைத்து ரேஷன் கார்டுகளுக்கும் ரூ.4,000/- கொடுத்தார்கள். அதேபோல, 2023 பெருமழை பெய்தபோது சென்னை, தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள அத்துனை ரேஷன் கார்டுகளுக்கும் ரூ.6,000/- கொடுத்தார்கள். அதனால், கடந்த ஆண்டு தான் ரூபாய் கொடுக்க முடியாமல் போனது, அதற்கு நிதிநிலை ஒரு காரணம்.



ஆகவே, தேர்தலை வைத்து எந்தத் திட்டமும் எங்கள் தலைவர் செய்வது கிடையாது. கொரோனாவால் தாய், தகப்பனை இழந்த பிள்ளைகளுக்கு ஒவ்வொருவர் பெயரிலும் ரூ.5 இலட்சம் account-ல் போட்டிருக்கிறோம். அதேபோல, ஒரு தாய், ஒரு பெற்றோரை இழந்தவர்களுக்கு ரூ.3 இலட்சம் கொடுத்தோம். அவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை கொடுக்கிறோம். ஆகவே, நாம் செய்கிற அன்புக் கரங்கள் திட்டமாக இருந்தாலும் தேர்தலை வைத்து எந்தத் திட்டமும் இந்த ஆட்சி செய்வதில்லை. எங்களுடைய தலைவர், நம்முடைய மக்கள் நலனுக்காகத் தான் செய்கிறார்கள்.

அமைச்சர் அர. சக்கரபாணி: கொரோனா காலத்தில் எல்லோருமே ஊரை விட்டு, வீட்டைவிட்டு வெளியே வரக்கூடாது என்று சொல்லி ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்க ப்பட்டது.

நீங்கள் ஆட்சியில் இருக்கும்போது பிறப்பித்தீர்கள். அப்போது எங்கள் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் ஆட்சியில் இருந்தீர்கள். அப்போது என்ன சொன்னார், மக்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு குடும்பத்திற்கு ரூ.5,000/- கொடுங்கள் என்று சொல்லி சட்டமன்றத்திலும் பேசினார்கள்; மக்கள் மன்றத்திலும் பேசிப் பார்த்தார்கள். நீங்கள் ஆயிரம் ரூபாய் கொடுத்தீர்கள். மறுபடி பலமுறை கேட்டுப் பார்த்தார்கள். ஆயிரம் ரூபாய்தான் கொடுத்தீர்கள். கொடுக்கவில்லை. பலமுறை சொல்லிப் பார்த்தார்கள். ஆனால், முதலமைச்சர், எங்கள் தலைவர் என்ன சொன்னார்; நீங்கள் தரவில்லை, நாங்கள் ஆட்சிக்கு வந்தபின்பு முதல் கையெழுத்து போட்டு, ரூ.5,000/- உங்களை கொடுக்கச் சொன்னேன், நீங்கள் கொடுக்கவில்லை. ஆயிரம் ரூபாய்தான் கொடுத்தீர்கள். ரூ.4,000/- நான் கொடுப்பேன் என்று சொல்லி முதல் கையெழுத்து போட்டு (மேசையைத் தட்டும் ஒலி) 2 கோடியே 9 இலட்சம் பேருக்கு ரூ.4,000/- கொடுத்தார்கள். அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் 14 வகையான மளிகைப் பொருட்களையும் கொடுத்தவர், இன்றைய முதலமைச்சர் தளபதி அவர்கள் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. அது தேர்தலுக்காக நாங்கள் கொடுக்கவில்லை. அப்போது 2021-ல் தேர்தல் நடக்கவில்லை. சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றியவர்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

### 100 ஆண்டுகள் பழமையான கட்டிடங்களை சீரமைத்துக் கொண்டிருக்கிறோம்

# திருவண்ணாமலையில் 3 ஆய்வு மாளிகைகள் கட்டப்பட்டுள்ளன!

## சட்டப்பேரவையில் – கு.பிச்சாண்டி கேள்விக்கு – அமைச்சர் எ.வ.வேலு பதில்!

**சென்னை, ஜன. 26– சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி கேட்ட கேள்வியும் அக்கேள்விக்கு பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அளித்த பதிலும் வருமாறு:–**

**கு. பிச்சாண்டி:** என்னுடைய கீழ்ப்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதியில், நாயுடுமங்கலம் என்ற பகுதியிலே வெள்ளைக்காரர் காலத்தில் ஒரு ஏக்கருக்கு மேல் அங்கே ஒரு ஆய்வு மாளிகை கட்டப்பட்டிருக்கிறது. ஆனால், அது பழுதடைந்திருக்கிறது. அது இப்போது தேசிய நெடுஞ்சாலையாக, மங்களூர் கடலூருக்கு தேசிய நெடுஞ்சாலையாக மாறியிருக்கிறது. ஆகவே, முக்கியமான அந்த இடத்திலே மீண்டும் ஒரு ஆய்வு மாளிகை கட்டித் தரப்படுமா? அதேபோன்று நெடுங்குளம் என்ற கிராமத்திலே வெள்ளைக்காரர்கள் காலத்திலே கட்டப்பட்ட ஒரு ஆய்வு மாளிகை இருக்கிறது. அப்படிப்பட்ட புராதானமான ஆய்வு மாளிகைகள் நிறைய இருக்கின்றன. அவைகளைக் கண்டறிந்து அவைகளில் ஆய்வு மாளிகை கட்டித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் எ.வ. வேலு:** நாயுடுமங்கலத்திலே இருக்கிற அந்த ஆய்வு மாளிகை என்பது நானும் அறிவேன். பொதுவாக திருவண்ணாமலை மாவட்டத்தைப் பொறுத்தளவிற்கு இந்த ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே ஜவ்வாது மலை என்கிற பகுதியிலே ஆய்வு மாளிகையே இல்லை, Circuit Houseயே இல்லை என்ற அடிப்படையில், முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தவுடனே அதைக் கட்டுவதற்கு அனுமதியளித்தார்கள். பணம் ஒதுக்கினார்கள். இப்போது அந்த மலையில் ஆய்வு மாளிகை கட்டப்பட்டு, துணை முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் அதை நாங்கள் திறந்து வைத்தோம். ஒன்று. இன்னொன்று, சட்டமன்ற உறுப்பினர் ஜோதி அவர்கள் ஒரு கோரிக்கை வைத்தார்கள். ஏற்கெனவே, இருக்கிற அந்த ஆய்வு மாளிகை தலையில் விழுகின்ற நிலையில் இருக்கிறது என்பதை அவர் கோரிக்கையாகச் சொன்னார். அதை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றோம். அங்கும் ஒன்று புதிதாகக் கட்டிக் கொடுத்தார்.



திருவண்ணாமலை என்பது மாவட்டத்தின் தலைநகர். அங்கு ஆய்வு மாளிகையே இல்லாத ஒரு சூழ்நிலை நீண்ட நாட்களாக இருந்தது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு முன்னால் ஆய்வு மாளிகை ஒன்றைக் கட்டித் தர வேண்டுமென்று என் சார்பாகவும், சட்டமன்ற உறுப்பினரின் சார்பாகவும் கேட்டேன். முதலமைச்சர் அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள். திராவிட மாடல் ஆட்சியில் அந்த மாவட்டத்தில் 3 ஆய்வு மாளிகைகள் கட்டப்பட்டுள்ளன. அதனால், கு. பிச்சாண்டி அவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், அதுகுறித்து நானும் அறிவேன்; 100 ஆண்டு காலம் பழமையான கட்டடங்களையெல்லாம் Iconic என்ற அடிப்படையில் நாம் அவற்றைக் கட்டிக் கொண்டுதான் இருக்கிறோம்; சீரமைத்துக்கொண்டிருக்கிறோம். 2026-2027 நிதியாண்டில் கட்டாயமாக நாயுடுமங்கலத்தில் சுற்றுலா மாளிகை கட்டித் தரப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 340வது நாள்!

## வில்லிவாக்கம் கிழக்குப் பகுதியில் உணவு வழங்கினர்!

சென்னை, ஜன. 26- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 340 ஆம் நாளான - கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (25.1.2026), வில்லிவாக்கம் கிழக்கு பகுதி: 1) வட்டம் 96, தாகூர் நகர், KJH ரோடு சந்திப்பு, 2) வட்டம் 98அ, கே.எச்.ரோடு, மார்கெட் தெரு சந்திப்பு, ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொது மக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.



இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, வே.வாசு, கூ.பீ.ஜெயின், லதாவாசு எம்.சி, டி.வி. செம்மொழி எம்.சி, சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன் எம்.சி, வானவில் விஜய், வில்லிவாக்கம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எ. வேதா, சீ.விக்னேஷ், ச. மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, சிட்கோ சேகர், ஆர்.தீனதயான், க. சுகுமாரன், மா.அகிலன், ஜானி (எ)உமாசங்கர், சொ.முருகேசன், ப.லோகு பாபு, கே.எஸ்.பாபு. இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P. விஜயகுமார், ம. அசோக்குமார், L.சம்பத்குமார், க. பா.பிரதீப் குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடி கள் கலந்து கொண்டனர்.

### திருவரங்கம் அரசு கல்லூரியில்

# கூடுதல் வகுப்பறைகள் - உள் கலையரங்கம் கட்ட நடவடிக்கை!

## பேரவையில் அமைச்சர் கோவி.செழியன் தகவல்!

சென்னை, ஜன.26- உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் பேரவையில் மொ. பழனியாண்டி எழுப்பிய திருவரங்கம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் உள் கலையரங்கம் அமைக்க அரசு முன்வருமா? என்ற கேள்விக்கு அளித்த பதிலுரை:

முல்லைப் பெரியாறு அணை என்றால் பென்னிகுவிக் வரலாறும், கல்லணை என்றால் கரிகாலச்சோழன் வரலாறும் எழுதப்பட்டிருப்பதை போல, சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதி மக்களின் குடிநீர் தாகத்தை போக்க செங்கல்பட்டு மாவட்டம், நெம்மேலியில் “மாமல்லன்” புதிய குடிநீர் தேக்கத்தை கட்டிய முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் வணக்கத்தை தெரிவித்து, திருவரங்கம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு பெருந்தலைவர் காமராசர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கூடுதலாக வகுப்பறைக் கட்டடம் கட்டுவதற்கான உரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு மாணாக்கர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இக்கல்லூரியில் உள் கலையரங்கம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை பேரவை தலைவர் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஸ்ரீரங்கம், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியானது பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியாக 2011-12-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பின்னர், 2020-21-ஆம் ஆண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியாக மாற்றம் செய்யப்பட்டது.

இக்கல்லூரியில், தற்போது 8 இளநிலை பட்டப்படிப்புகள் மற்றும் 4 முதுநிலை பட்ட மேற்படிப்புகளுடன் இயங்கி வருகிறது. இக்கல்லூரியில் சுமார் 1,400 மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர். மாணாக்கர்களின் தேவையறிந்து இவ்வரசு பொறுப்பேற்றவுடன் பெருந்தலைவர் காமராசர் கல்லூரி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 10 வகுப்பறை கட்டடங்கள் கட்டுவதற்கு சுமார் ரூ.3 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.



மேற்படி வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டு தற்போது மாணாக்கர்களின் பயன்பாட்டிற்கு உள்ளது. மேலும், இக்கல்லூரியில் 150 மாணாக்கர்கள் அமரும் வகையில் ஒரு மினி செமினார் ஹால் கருத்தரங்கக் கூடம் செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரிக்கு உள்கலையரங்கம் அமைப்பதற்கான தேவை தற்போது ஏதும் எழவில்லை.

இருப்பினும், தேவை ஏற்படின் நிதிநிலைக்கு ஏற்ப வரும் கல்வியாண்டுகளில் முதலமைச்சர் அவர்களின் அனுமதி பெற்று அமைத்து தரப்படும் என்று பதிலுரையாற்றினார்.



ஜனவரி 25 மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாளை முன்னிட்டு, மொழிப்போர் தியாகி க இளமதி அவர்களுக்கு, அவரது பேரனும், சுற்றுச் சூழல் அணி மாவட்ட துணை அமைப்பாளர் Wefas த.பத்மநாபன் தலைமையில் சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி, 123வது வட்ட கழகத்தில் நடைபெற்ற வீரவணக்க நாள் நிகழ்ச்சியில், மாவட்ட கழக செயலாளர் மற்றும் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வீரவணக்கம் செலுத்தி 100 பள்ளி மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி. எம்.சி., கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி, சுற்றுச் சூழல் அணி மாநில துணை செயலாளர் பழ செல்வகுமார், வட்ட செயலாளர் மு.இ.ஏழுமலை, சுற்றுச் சூழல் அணி மாவட்ட அமைப்பாளர் எஸ்.என்.பாலசுப்ரமணியன், மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் ஜனனி இளங்கோவன், மாவட்ட, பகுதி, வட்ட, அணிகளின் நிர்வாகிகள், மாணவ மாணவிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு வீரவணக்கம் செலுத்தினர்.

### வே.வாசு தலைமை! அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ.- ப.ரங்கநாதன் - கூ.பீ.ஜெயின் முன்னிலை!

### ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. - மேயர் பிரியா- தயாநிதி மாறன் - எம்.பி.கலாநிதி வீராசாமி எம்.பி. பங்கேற்பு!

# வில்லிவாக்கம் - காஞ்சி செ.துரை புஷ்பவள்ளி இல்ல மணவிழா வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் – பி.சே.சேகர்பாபு வாழ்த்துகிறார்!

சென்னை, ஜன. 26- சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் கிழக்குப் பகுதி, 98 (ஆ) வட்டக் கழகச் செயலாளர் காஞ்சி செ.துரை புஷ்பவள்ளி துரை ஆகியோரின் புதல்வி டி. மங்கையர்கரசிம், என். இராமதாஸ் ஆர். செல்வநாயகி ஆகியோரின் புதல்வர் ஆர்.பாலசுந்தரம் ஆகியோரின் மணவிழா 28.1.2026 புதன்கிழமை அன்று காலை 7 மணிக்கு பூமீஸ்வரர் திருக்கோயில், ஹார்பார் குவார்ட்டர்ஸ் டோல்கேட், புது வண்ணாரப்பேட்டை, சென்னையில் நடைபெறுகின்றது.

அதனைத் தொடர்ந்து மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி 28.1.2026 அன்று மாலை 6 மணிக்கு எஸ்.எஸ்.மஹால் இளைய முதலி தெரு, தண்டையார் பேட்டையில் நடைபெறுகின்றது.

மணவிழா வரவேற்புக்கு வில்லிவாக்கம் கிழக்குப் பகுதிச் செயலாளர் வே.வாசு தலைமை வகிக்கிறார். அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ ப.ரங்கநாதன்,



வில்லிவாக்கம் மேற்குப் பகுதிச் செயலாளர்- மண்டலக் குழுத் தலைவர் கூ.பீ.ஜெயின், ஆர்.கே. நகர் பகுதிச் செயலாளர்கள் ரா.இலட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர்கள் டி.வி.செம்மொழி, எசாவித்திரி ஸ்ரீவீரராகவன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சுதா தீனதயாளன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வானவில் விஜய், 97 வது வார்டு மாமன்ற உறுப்பினர் லதாவாசு, எம்.சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். புரசை சம்பத், டி. தாமோதரன், டவிள்யூ. அமுல், நா. அறிவுடைநம்பி, கே.பாஸ்கர், சி.தேவராஜ், எ.வேதா, விக்னேஷ் சீனிவாசன், ச.மனோரகன் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

மணவிழா வரவேற்பில் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் இந்து சமய அறநிலையத் துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அமைச்சர் பி.கே.சேகர் பாபு, வடக்கு மாவட்டச் செயலாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., மேயர் பிரியா, ஒன்றிய முன்னாள் அமைச்சர் தயாநிதி மாறன் எம்.பி., டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ப.தயாகம்கவிஎம்.எல்.ஏ., ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., ஜெ.ஜெ.எபினேசர் எம்.எல்.ஏ., இளைய அருணா, எம்.சி., ஒ.ஏ.நாகலிங்கம், வழக்கறிஞர்கே.எஸ். இரவிச்சந்திரன், பி.கே. மூர்த்தி, கே.சந்துரு, சி. மகேஷ்குமார், பரிதி இளம் சுருதி, கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.மகாதேவன், புனிதவதி எத்திராசன், எம்.சி., இசட் ஆசாத் எம்.சி., சரிதா மகேஷ்குமார் எம்.சி., ப.ஸ்ரீராமுலு எம்.சி., யு.நேத்தாஜிகணேசன், எம்.சி., ஐ.சி.எப். வ. முரளிதரன், எ.நாகராசன், எம்.சி., சொ.வேலு எம்.சி., வி.சுதாகர், எம்.சாமிக்கண்ணு, செ. தமிழ்வேந்தன், டி.எஸ்.பி.இராஜகோபால், எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், எஸ்.இராஜசேகர், எஸ்.முரளி, மாமன்ற உறுப்பினர்கள் ஆ.பிரயர்ஷினி, தனலட்சுமி சரவணன், குமாரி நாகராஜ், நா. துலுக்காணம், ஜி.தாமோதரன், துரைகண்ணன், எல்.பி.எப்.மோகன், எல். சம்பத் குமார், ராஜேஸ்வரி ஸ்ரீதர், கு.கிருஷ்ணமூர்த்தி, ஜி.ஜெ.பிரபு, அஞ்சல் எம். ராமன், ஒ.ஏ.நாகூர் கனி, த.முத்துமாரியப்பன், ஜெ.எஸ்.பிரபு, வி.து.இராமமூர்த்தி, பா.இளையா, ம. கலைச்செல்வி, ஐ.சி.எப். மு.சுரேஷ் பாபு, சிட்கோ சேகர், ஆர்.தீனதயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், பா.ஜானி, சொ.முருகேசன், ப.லோகுபாபு, கே. எஸ்.பாபு, நா.கோதண்டன், மா.நாகராஜன் உள்பட மற்றும் பலர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர். மணவிழாவிற்கு வருகை தருவோரை மா.குணசேகரன், டி.வெங்கடேசன், எஸ்.யுவராஜ், கு.இளங்கோ, எஸ்.விஜயகுமார், எஸ்.சாம்சன் ஆகியோர் வரவேற்கின்றனர். வட்டச் செயலாளர் காஞ்சி செ.துரை, புஷ்பவள்ளி துரை ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.